# சேர்ந்து வாழுதல்

சுவிட்சர்லாந்தில் மக்கள் ஒன்றாக வாழ பல்வேறு வழிகள் உள்ளன. நீங்கள் திருமணம் செய்ய விரும்பினால், உங்களுக்கு குறைந்தபட்சம் 18 வயது இருக்க வேண்டும். கணவன் மனைவி இருவருக்கும் ஒரே உரிமை உண்டு.

## ஒன்றாக வாழுதல்

சமீபத்திய தசாப்தங்களில் சுவிட்சர்லாந்தில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலும் திருமணமாகாத தம்பதிகள் (துணைவர், Konkubinat) ஒன்றாக வாழ்கிறார்கள். தம்பதியருக்கு ஒன்றாகக் குழந்தைகளும் உள்ளனர். கணவன் மனைவி இடையே யார் என்ன பாத்திரம் வகிப்பது என்று நிலையான பிரிவு இல்லை. இதன் பொருள் பெண்களும் ஆண்களும் உறவில் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை.
ஒரே பாலினத்தவர்களும் ஒன்றாக வாழ அனுமதிக்கப்படுகிறார்கள், உதாரணமாக ஒரு ஆணுடன் ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணுடன் ஒரு பெண்.மற்ற ஜோடிகளுக்கு உள்ள அதே உரிமை இவர்களுக்கும் உள்ளன. மேலும் இவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## திருமணம்

சுவிட்சர்லாந்தில் 18 வயதிலிருந்து மட்டுமே திருமணம் செய்து கொள்ள முடியும். ஒரே பாலின ஜோடிகளும் திருமணம் செய்து கொள்ளலாம்: ஒரு ஆண் ஒரு ஆணை திருமணம் செய்து கொள்ளலாம் மற்றும் ஒரு பெண் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம். நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், நீங்கள் Basel-Stadt மாநிலத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தில் (Zivilstandsamt) பதிவு செய்ய வேண்டும். பின்னர் சார் பதிவாளர் அலுவலகம் 'திருமண தயாரிப்பு நடைமுறையைத்' தொடங்குகிறது. இந்த நடைமுறை மூலம் திருமணம் தயார் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக மணமக்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்களா என்பதை அலுவலகம் சரி பார்க்கிறது. செயல்முறை முடிந்ததும், நீங்கள் 3 மாதங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இந்த நடைமுறை எவ்வாறு செயல்படுகிறது மற்றும் இதற்கு உங்களுக்கு எந்தெந்த ஆவணங்கள் தேவைப்படும் என்பதைச் சார்பதிவாளர் அலுவலகம் உங்களுக்குத் தெரிவிக்கும்.
ஒருவேளை ஒரு துணைவர் இன்னும் வெளிநாட்டில் இருக்கிறார் எனில் நீங்கள் உங்கள் துணைவர் சுவிட்சர்லாந்துக்குள் நுழைய அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம் (திருமண ஏற்பாடு). அதன்பின் நீங்கள் இருவரும் சுவிட்சர்லாந்தில் திருமணம் செய்துக் கொள்ளலாம்.
ஒருவேளை நீங்கள் போலித் திருமணத்தில் (Scheinehe) நுழைகிறீர்கள் என்ற ஒரு சந்தேகம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குத் தோன்றலாம். போலித் திருமணம் என்றால்: நீங்கள் திருமணம் செய்து கொள்வதின் மூலம் துணைவர் ஸ்விட்சர்லாந்தில் வசிக்க முடியும் என்ற ஒரே காரணத்திற்காக திருமணம் செய்து கொள்வது. சார்பதிவாளர் அலுவலகம் இந்தத் திருமணத்தை ஏற்க மறுக்கலாம். நீங்கள் ஏற்கனவே திருமணம் செய்திருந்தால் அலுவலகம் இந்தத் திருமணம் செல்லாது என்றும் அறிவிக்கலாம். எனில் இந்த திருமணம் மீண்டும் கலைக்கப்படும். அல்லது ஒருவேளை நீங்கள் போலித் திருமணத்தின் விளைவாக உங்கள் குடியிருப்பு அனுமதியையும் இழக்க நேரிடும்.

## உரிமைகளும் பொறுப்பும்

சட்டத்தின்படி வாழ்க்கைத் துணைவர்கள் இருவருக்குமே அதே உரிமைகள் மற்றும் கடமைகள் உள்ளன. திருமணத்தில் அவர்களுக்கு சம உரிமை உண்டு. சேர்ந்து வாழும் இருவரும் தானாக முன்வந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். கட்டாய திருமணத்தில் (Zwangsheirat) மணமுடிக்கும் ஒரு நபர் திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தப்படுகிறார். இதை அதிகாரிகள் கண்டறிந்தால், திருமணத்தை ரத்து செய்யலாம். மற்றொருவரை திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தும் நபர் தண்டனைக்கு உள்ளாவார்.
நீங்கள் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தப்படுவதாக உணர்கிறீர்களா? zwangsheirat.ch ஆலோசனை மையம் உங்களுக்கு ஆதரவளிக்கும். அழைப்பு இலவசம். இதன் தொலைபேசி எண்: 0800 800 007

## குடும்பத்தைத் திட்டமிடல்

குடும்பக் கட்டுப்பாடு, கர்ப்பம் மற்றும் பாலுணர்வு பற்றி உங்களிடம் கேள்விகள் உள்ளதா? Basel-Stadt மாநிலத்தில் இதற்கான ஆலோசனை மையங்கள் உள்ளன. இந்த மையங்கள் உதாரணமாகக் கருத்தடை, பாலியல் பிரச்சனைகள், பாலியல் ஆரோக்கியம், பாலியல் நோய்கள் அல்லது விருப்பமற்ற தற்செயலான கர்ப்பம் போன்ற பல்வேறு தலைப்புகளில் தகவல்களை வழங்குகின்றன. உங்களுக்கு குழந்தை பிறக்கப் போகிறதா அல்லது உங்களுக்கு ஏற்கனவே குழந்தைகள் உள்ளதா அனைவருக்கும் இவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள்.

## விவாகரத்து

நீங்கள் திருமணம் ஆனவரா? விவாகரத்து வேண்டுமா?எனில் நீங்கள் Basel-Stadt குடும்பவியல் நீதிமன்றத்தில் (Zivilgericht) விவாகரத்துக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் தனியாக விவாகரத்துக் கோரலாம் அல்லது உங்கள் துணைவருடன் சேர்ந்து விவாகரத்துக் கோரலாம்.
வெளிநாட்டில் திருமணம் நடந்ததா? அப்போதும் சுவிஸ் சட்டப்படி விவாகரத்து பெறலாம். ஆனால் நீங்கள் சுவிட்சர்லாந்தில் குறைந்தது ஒரு வருடமாவது வாழ்ந்திருக்க வேண்டும். மேலும் சுவிட்சர்லாந்து உங்கள் தலைமை வசிப்பிடமாக இருக்க வேண்டும். விவாகரத்து உங்கள் குடிமை நிலையை மாற்றலாம். சில சமயம் விவாகரத்துக்குப் பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்தில் வாழ அனுமதிக்கப்படமாட்டீர்கள். நீங்கள் உள்நாட்டு குடியுரிமையை குடிமை குடியுரிமை தரப் போகிறீர்களா? எனில் விவாகரத்துக்கு பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்து குடியுரிமையைப் பெற முடியாமலும் போகலாம்.
விவாகரத்துக்குப் பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்தில் தங்க அனுமதிக்கப்படுவீர்களா? திருமணம் மற்றும் குடும்பங்களுக்கான ஆலோசனை மையம் அல்லது சட்ட ஆலோசனையை மையத்தைக் கேட்பது சிறந்தது. நீங்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தால் சிறப்பு விதிகள் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/partnership